# கொரோனா வைரஸ் தடுப்பு பணிகள் அமைச்சர் நமச்சிவாயம் ஆலோசனை



கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, அமைச்சர் நமச்சிவாயம் தலைமையில் உள்ளாட்சி துறை அதிகாரிகள், வணிகர் சங்க நிர்வாகிகள் பங்கேற்ற ஆலோசனை கூட்டம் நேற்று நடந்தது.

**புதுச்சேரி, மார்ச் 22–**

கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, அமைச்சர் நமச்சிவாயம் தலைமையில் உள்ளாட்சி துறை அதிகாரிகள், வணிகர் சங்க நிர்வாகிகள் பங்கேற்ற ஆலோசனை கூட்டம் நேற்று நடந்தது.

இதில், இன்று நடைபெறும் மக்கள் ஊரடங்கில், வணிகர் சங்கத்தினர் பங்கேற்று ஒத்துழைப்பு அளிப்பது, வணிகர்களுக்கு பாதுகாப்பு மற்றும் உள்ளாட்சி துறையின் மூலம் மேற்கொள்ள வேண்டிய கொரோனா விழிப்புணர்வு குறித்து ஆலோசிக்கப் பட்டது.

கூட்டத்தை தொடர்ந்து, அமைச்சர் நமச்சிவாயம் கூறியதாவது:

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக புதுச்சேரி மாநிலத்தில் அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அதையொட்டி, வியாபாரிகள் சங்கங்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினேன். கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்க ஒத்துழைப்பு தர வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டது. முழுமையாக ஒத்துழைப்பு அளிப்பதாக கூறினர்.

மாநில எல்லைகள், நகரம் மற்றும் கிராமங்களில் கிருமி நாசினி தெளிக்க, உள்ளாட்சித்துறை அதிகாரிகளுக்கும், நகராட்சி, கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பாதுகாப்பு நடவடிக்கைகளை பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டும். ஒரே இடத்தில் அதிகளவில் மக்கள் கூடுவதை தவிர்க்க வேண்டும். அடிக்கடி கைகளை கழுவ வேண்டும். கிருமி நாசினி தெளிக்க வேண்டும்.

நகரப்பகுதியில் மக்கள் தங்கள் கைகளை சுத்தம் செய்து கொள்ள மொபைல் கழிப்பிடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மக்கள் அரசுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# கிருமி நாசினி தயாரிக்கும் பணியில் மகளிர் சுய உதவிக் குழுவினர் தீவிரம்

**புதுச்சேரி, மார்ச் 22–**

கைகளை சுத்தம் செய்யும் கிருமி நாசினியை, மகளிர் சுய உதவிக் குழுவினர் மூலமாக தயாரிக்கும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளது.

கொரோனா எதிரொலியாக, கைகளை சுத்தம் செய்யும் கிருமி நாசினிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், மகளிர் சுய உதவிக் குழுவினர் மூலமாக கிருமி நாசினியை தயாரிக்க கலெக்டர் உத்தரவிட்டார். இதற்காக, உழவர்கரை நகராட்சியின் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் பதிவு செய்துள்ள மகளிர் சுய உதவிக் குழு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்த குழுவினருக்கு, கிருமி நாசினி தயாரிப்பது குறித்து, காஞ்சி மாமுனிவர் அரசினர் பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் வேதியியல் துறை தலைவர் ராஜமதி தலைமையில், பேராசிரியர்கள் பயிற்சி அளித்தனர். மூலப் பொருட்களை வாங்குவதற்கு, உழவர்கரை நகராட்சி அதிகாரிகள் உதவி செய்தனர்.

இதை தொடர்ந்து, கிருமி நாசினி தயாரிக்கும் பணியை, மகளிர் சுய உதவிக் குழுவினர் நேற்று துவக்கினர். முதல் நாளான நேற்று 50 லிட்டர் கிருமி நாசினியை தயாரித்தனர்.

உழவர்கரை நகராட்சி ஆணையர் கந்தசாமி, பட்டமேற்படிப்பு மையத்தின் இயக்குனர் அறவாழி இருசப்பன் பார்வையிட்டனர்.

உழவர்கரை நகராட்சியின் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்க உதவி திட்ட அதிகாரி சரவணன், சுய உதவிக் குழு கூட்டமைப்பின் தலைவி கல்பனா உடனிருந்தனர்.



காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையத்தில் மகளிர் சுய உதவிக் குழுவினர் மூலமாக கிருமி நாசினி தயாரிக்கும் பணியை, உழவர்கரை நகராட்சி ஆணையர் கந்தசாமி பார்வையிட்டார். அருகில், பட்ட மேற்படிப்பு மைய இயக்குனர் அறவாழி இருசப்பன்.